12T2

மாவட்டப் பொதுத் தேர்வுகள்

மாதிரிப் பொதுத் தேர்வு - ஜனவரி 2015

www.tnschools.co.in

வகுப்பு 12

காலம்: 3.00 மணி | தமிழ் இரண்டாம் தாள் | மதிப்பெண்கள்: 80

(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)

**I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் பத்து வரிகளின் மிகாது விடை தருக:** *3×4=12*

1) தமிழ்மொழியின் மீது பற்றுக் கொள்ளாத தமிழ் மக்களைப் பரிதிமாற்கலைஞர் கடிந்துரைப்பது யாங்ஙனம்?
2) நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றித் திரு.வி.க. உரைப்பன யாவை?
3) கவிதை என்பது யாது என்ற வினாவிற்கு வோர்ட்ஸ்வொர்த், கோலரிட்ஜ் ஆகியோர் கூறும் விளக்கங்கள் யாவை?
4) அக்காலத்துக் கல்வியே சிறந்ததாக இளவளகனார் கருதுதற்குக் காரணங்கள் யாவை?
5) ஈகைப் பண்பில் தமிழ்மக்கள் சிறந்து விளங்கிய தன்மையை விளக்குக.

**II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் பத்து வரிகளின் மிகாது விடை தருக:** *3×4=12*

6) மாடு என்பது செல்வம் போலக் கருதப்படக் காரணங்கள் யாவை?
7) விறலுடைய இளைஞர்க்கும் மாடு உவமையாகக் கூறப்பட்டதனை விளக்குக.
8) செல்வம் நிலைபேறு உடையதன்று - என்பதை நாலடி எங்ஙனம் நயம்பட நவில்கிறது?
9) ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு.வ. காட்டும் வழிகள் யாவை?
10) சோழர் காலத்துச் சிற்பிகளின் திறமையைப் புலப்படுத்துக.

**III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் இருபது வரிகளின் மிகாது விடை தருக:** *1×6=6*

11) தமிழ் - உயர்தனிச் செம்மொழி - இத்தலைப்பின் கீழ்ப் பரிதிமாற்கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.
12) தேர்தல் முறைகள் பற்றி மு.வ. எடுத்துரைக்கும் கருத்துகள் யாவை?

**IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக:** *2×10=20*

13) 'பால்வண்ணம் பிள்ளை' **அல்லது** 'மகன்' என்னும் சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக. **(அல்லது)**
'சட்டை' **அல்லது** 'வேலி' என்னும் சிறுகதையின் ஒரு பகுதியினை நாடக வடிவில் எழுதுக.
14) 'ஒவ்வொரு கல்லாய்' **அல்லது** 'மண்' என்னும் சிறுகதையில் நும் மனம்கவர்ந்த கதைமாந்தர் குறித்து திறனாய்வு செய்க. **(அல்லது)**
கிட்டு தன் தமையன் தனக்குச் செய்த உதவிகளை நினைத்து மகிழ்வது போல ஒரு கதை எழுதுக.

**V. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து அதில் அமைந்துள்ள மையக்கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக:** *1×10=10*

15) வள்ளுவர் தந்த திருமறையைத் - தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே - என்றும்
உத்தம ராகி ஒழுகுவமே!

பாலின் சுவைக்கடல் உண்டெழுந்து - கம்பன்
பாரில் பொழிந்ததீம் பாற்கடலை
நாவில் இனிக்கப் பருகுவமே - நூலின்
நன்னயம் முற்றும் தெளிகுவமே.

தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும் - நிதம்
ஓதி உணர்ந்தின் புறுவோமே!

- *கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை*

www.tnschools.co.in



*VI.* **பின்வரும் தொடர்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தமிழாக்கம் தருக:** *3×2=6*

16) Diamond cuts diamond.

17) One lie makes many.

18) Where there is a will there is a way.

19) Think everybody a like.

20) Writing essay in an art.

21) Students want to join computer courses.

*VII.* **பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில் வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் பத்து வரிகளுக்கு மிகாது எழுதுக:** *1×4=4*

22) அ) நெருப்பில்லாமல் புகையாது

ஆ) பழகப் பழகப் பாலும் புளிக்கும்

இ) தனிமரம் தோப்பாகாது **(அல்லது)**

'புயல்' **அல்லது** 'மயில்' என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை எட்டு அடிகளுக்கு மிகாமல் எழுதுக.

*VIII.* **பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டவாறு விடை எழுதுக:** *10×1=10*

23) எனக்குப் பல வீடுகள் உள்ளது.

***(வாக்கியப் பிழையைத் திருத்தி எழுதுக)***

24) எதையும் எழுதி பழக வேண்டும் என்று எனக்கு சொன்னார் ஆசிரியர்.

***(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக)***

25) கபிலப்பரணர் வளர்ப்பிறை ஒளியில் சுடுச்சோறும் காய்க்கறியும் உண்டனர்.

***(தேவையற்ற இடங்களில் வல்லின மெய்களை நீக்கி எழுதுக)***

26) டயாபெட்டிக் பேஷண்ட் ஸ்வீட் சாப்பிடுவதை ஸ்டாப் செய்ய வேண்டும்.

***(ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக)***

27) கரும்புத் தோப்புக்கு அருகாமையில் நாய் கத்தியது.

***(மரபு வழூஉச் சொற்களை நீக்கி திருத்தமாக எழுதுக)***

28) பரவை இறையாக பயிரு வகைகளைத் திண்ணும்.

***(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக)***

29) வலை - வளை **அல்லது** இரை - இறை

***(சொற்களின் பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் வாக்கியங்களில் அமைத்து எழுதுக)***

30) அப்பிசி மாசம் அடமள இம்பாங்க.

***(கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக)***

31) சந்நிதியில் சகல ஜனங்களும் உபந்நியாசம் கேட்கத் திரண்டிருந்தார்கள்.

***(வடசொற்களை நீக்கி நல்ல தமிழில் எழுதுக)***

32) சாத்தன் வந்தது முடவன் வந்தது சாத்தன்
புற்றின்னும் சாத்தி கன்றீனும் முதலிய சொல்லதிகார உரையெடுத்துக்காட்டுகளை நோக்குக.

***(பொருத்தமான நிறுத்தற்குறிகளை இட்டெழுதுக)***

----------